
# தலைதாழாச் சிங்

# தந்தை பெரியா

K. JANAKIRAMA
No. 6, A umuga Chetty Stre
N. K. Road, Chet uk
600 005.



## தலைவர்
## கலைஞர்

# தலைதாழாச் சிங்கம் தந்தை பெரியார்!

ஆய்வக
நூல்நிலையம்
சென்னை-18

K. JANAKIRAMAN
No. 6, Arumuga Chetty Street,
C. N. K. Road, Chepauk,
MADRAS - 600 005.

தலைவர் கலைஞர்

வெளியீடு :

திராவிட முன்னேற்றக் கழகம்

"அன்பகம்"

தேனாம்பேட்டை சென்னை-18

தி. மு. க. வெளியீடு

முதற் பதிப்பு : 1985

8434

923.65411

விலை : 2-00


அச்சிட்டோர் :

தமிழோசை அச்சகம், 84, அபிபுல்லா சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.

## இந்நூல்...

13—7—85—ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில், தந்தை பெரியார் அவர்களின் படத்தைத் திறந்து வைத்து, **தலைவர் கலைஞர்** ஆற்றிய உரையை தலைமைக் கழகம் இந்நூல் வடிவில் தருகிறது. படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

சி. டி. தண்டபாணி
வெளியீட்டுச் செயலாளர்
தி. மு. க.
தலைமைக் கழகம்



"பெரியார்

இளவயதில் மறையவில்லை
நிறைவயது வாழ்ந்துவிட்டே ஓய்வுகொண்டார்
எனினும்
தாஜ்மகால் திடுமென தரைக்குள்ளே போய்விட்டால்
அதைக்கட்டி ஆண்டு பல ஆயிற்றே என்று
ஆறுதல்தான் பெறுவோமா?
தஞ்சைக் கோபுரம் சாய்ந்துவிட்டால் அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்குதல்தான் எளிதாமோ? இவரோ,
தஞ்சைக் கோபுரம்போல் உயர்ந்தவர்-
தாஜ்மகால்போல் சரிதம் படைத்தவர்"

–தலைவர் கலைஞர்.

# தலை தாழாச் சிங்கம் தந்தை பெரியார்!

[சென்னை பெரியார் திடலில் 13-7-1985 அன்று நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாட்டில் தலைவர் கலைஞர் ஆற்றிய பேருரை.]

என் கண்களைத் திறந்த தந்தை பெரியார் அவர்களுடைய படத்தைத் திறக்கின்ற இந்த நிகழ்ச்சியில் வெள்ளம் போல் குழுமி இருக்கின்ற தமிழின மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்காக, இந்த வாய்ப்பினை வழங்கிய திராவிடர் கழகத்தினுடைய மாநாட்டு நிர்வாகக் குழுவினருக்கும், குறிப்பாகத் தளபதி வீரமணி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காலையிலே இருந்து இதுவரையில் பல்வேறு படத் திறப்பு விழாக்கள் நடைபெற்று, இந்த நிகழ்ச்சிகளுக் கெல்லாம் - நிகழ்ச்சிகளிலே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துகளுக்கெல்லாம் — அந்தக் கருத்துகளால் உருவாக்கப்பட்ட எழுச்சிகளுக்கெல்லாம் யார் வித்திட் டாரோ, அந்த மேதையின் படத்தைத்—திராவிடத் தந்தையின் படத்தை—இனமான வீருடைய படத்தைத் திறந்து வைக்கின்ற பணி எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் தனித் தமிழ்ஈழ நாடு வரையப்பட்ட படத்தினை இங்கே திறந்து வைத்து உரையாற்றிய போது ஒன்றைச் சொன்னார். தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் கருணாநிதியை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு பத்திரிகையிலே எழுதப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு அதைக் கண்டித்தார். நான் சொல்கிறேன். 'ஆமாம், தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் என்னை விட்டு விலகிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதை நான் நிச்சயமாக வரவேற்பேன். என்னை விட்டு விலகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு நான் கொள்கின்ற பொருள், அவர்கள் தமிழ்நாட்டை விட்டு விலகிக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள்.

தமிழ்நாட்டை விட்டு அவர்கள் விலகிச் செல்கின்ற காலம் தமிழ் ஈழம் அமைகின்ற காலமாக இருக்கும் என்ற காரணத்தால் எவ்வளவு நாள்தான் அவர்கள் என்னோடு இருப்பது; அவர்களுக்கு என்று ஒரு நாடு கிடைத்து, என்னைவிட்டு அவர்கள் விலகிச் செல்லக் கூடிய காலம் வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற நாங்கள் அந்தப் பத்திரிகையின் பதிலைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றாலும்கூட, அது, விஷமத்தனமாக அல்லது காழ்ப்புணர்ச்சியோடு அல்லது தமிழ் இன உணர்வு கிஞ்சிற்றும் இல்லாமல் எழுதப் பட்டிருக்கின்ற ஒரு வாசகம் என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

எனவேதான் தமிழனுடைய இனமான உணர்வு தமிழகத்தில் மாத்திரமல்ல; உலகம் முழுவதும் உயிர்ப்பிக் கப்பட வேண்டும்; காப்பாற்றப்பட வேண்டும் என்ற

K. JANAKI
No. 6, Arumuga Chetty Street,
C. N. K. Road, Chepauk,
MADRAS 600 005.



இலட்சியத்தோடு கடைசி மூச்சுள்ள வரையில் போராடிய தந்தை பெரியார் அவர்களை நாம் நினைவு கொள்கிறோம். மன்னிக்க வேண்டுகிறேன்; நினைவு கொள்கிறோம் என்று கூறுவது கூட தவறு. மறந்தால் அல்லவா நினைப்பதற்கு! எப்போதும் நம்முடைய நெஞ்சத்தில் நம்முடைய ஊனோடு உயிரோடு, உணர்வோடு கலந் திருப்பவர் தந்தை பெரியார்.

பெரியார் என்றால் இங்கே எழுதி வைக்கப்பட்டுத், திறந்து வைக்கப்பட்ட படத்தை மாத்திரம் நான் சொல்ல வில்லை. இந்தப் பெருவெளியில் ராதா மன்றத்திற்கு அருகாமையில் நீடுதுயில் கொண்டிருக்கிறாரே, அந்தப் பெரியார் அவர்கள், எந்தக் கொள்கைகள் இந்த இனத் திற்குத் தேவை என்று காலமெல்லாம் பாடுபட்டாரோ, எந்த இலட்சியங்களை இதயத்திலே ஏற்று நாம் பணி யாற்ற வேண்டுமென்று கடைசி மூச்சுள்ள வரையிலே முழங்கிக் கொண்டிருந்தாரோ - அந்தக் கொள்கைகள், இலட்சியங்கள் வெற்றி பெற வேண்டும். அதற்குச் சிறி தளவு ஊனம் ஏற்பட்டாலும், இழுக்கு யாரிடமிருந் தாவது வந்துற்றாலும், அந்தக் கொள்கைகளைச் சிதைப் பதற்கான முயற்சிகள் அதிகாரம் படைத்தவர்களால் நடத்தப்பட்டாலும், நாம் துடித்துப்போகிறோம்; நம் முடைய ரத்தம் கொதிக்கிறது; நரம்புகள் புடைக்கின் றன. ஏனென்றால் எத்தனையோ ஆண்டுக் காலம் இளமைப்பருவம் முதல் பெரியார் அவர்களை நம்முடைய நெஞ்சத்தில் நிறுத்தி, அவர் யாத்துத் தந்த கொள்கை களை இந்தத் தமிழகத்தின் வீதிதோறும் ஒலித்தவர்கள் நாம்! இன்றைக்கும் அந்தக் கொள்கையால்தான், அவர்

தந்த இலட்சியத்தால்தான் இந்த இனமே வாழ முடியும்; இந்த நாடு வளர முடியும்; இந்தச் சமுதாயம் எழுச்சி பெற முடியும் என்று நம்பிக் கொண்டிருப்பவர்கள் நாம்.

பெரியார் படத்தைத் திறந்து வைக்கும் நேரத்தில் அவருடைய எண்ணங்கள், ஐம்பது அறுபதாண்டு கால மாக சொல்லப்பட்ட கருத்துகள் இன்று வெற்றி பெற் றிருக்கின்றன என்பதை நான் இரண்டு நாள்களுக்கு முன்னால் அறிந்து பரவசமுற்றேன். 2,500 ஆண்டு களுக்கு முன்னால் புத்தர் சில வாசகங்களை உலகத்திற்குச் சொன்னார். அந்த வாசகங்களையும், வேறு சில கட்டுரை களையும் கொண்ட மத்திய அரசின் சார்பாக வெளியிடப் பட்ட 'திட்டம்' என்ற ஏடு ஒன்று என்னுடைய பார் வைக்கு வந்தது. மத்திய அரசின் செய்தித்துறையில் 'யோஜனா" என்ற பெயரில் ஆங்கிலத்திலும் இந்தி யிலும் வெளியிடப்படும் இதழ், தமிழில் 'திட்டம்' என்ற பெயரில் வெளியிடப்படுகிறது. அதிலேயே கடைசி பக் கத்தில் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்கள்.

"Edited, Printed and Published by D. Janaki on behalf of the Director, Publications Divisions, Ministry of Information and Broadcasting, Government of India, Pattiala House, New Delhi-110 001.

என்று அதிலேயே அச்சேற்றி வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழைப் பொறுத்த வரையில் இது தமிழ்நாடு அரசாங் கத்தின் அச்சகத்திலே மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கிறது. அந்த இதழிலே பெரியாரின் பெயர் எந்த இடத்திலும் குறிப்பிடப்படாவிட்டாலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு எழுத்திலும் பெரியார் சிரித்துக்

கொண்டிருப்பதை, பெரியாரின் கொள்கைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை என்னுல் காண முடிந்தது. அந்த இதழிலே ஒரு பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு பொன்மொழி இதோ:

"யாரோ ஒருவர் சொன்னுர் என்பதற்காக ஒன்றை நம்பாதே-அது நமது மரபு என்பதற்காக நம்பாதே—அல்லது நீயே அப்படி நினைத்தாய் என்பதற்காக நம்பாதே."

"ஆசிரியர்பால் கொண்டுள்ள மரியாதைக்காக ஆசிரியர் சொல்வதை நம்பிவிடாதே."

"சுயமாக ஆராய்ந்து, துருவிப் பார்த்து அது எல்லா மக்களுக்கும் நன்மை பயக்க வல்லது, நல்லது என்று வழி தோன்றினுல், அந்தக் கொள்கையைக் கடைப் பிடித்துக் காட்டி நெறியாக வைத்துக் கொள்."

"2500 ஆண்டுகளுக்கு முன்பு புத்தர் பெருமான் கூறியது இது. இதுதான் உண்மையில் அறிவியல் உணர்வு.'

அது மாத்திரமல்ல; அந்த இதழின் முதல் பக்கத் திலே "நன்றி, நேரு செண்டர்" "அறிவியல் உணர்வு பற்றிய அறிக்கை" என்று போட்டு, "அறிவியல் உணர்வு—அது என்ன?" என்ற தலைப்பின்கீழ் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதென்ருல்;

"வினுக்களை எழுப்பும் உரிமை, வினுக்களை வரவேற் கும் உரிமை, காரண காரியங்களை அறிய வேண்டும் என்ற வேட்கை ஆகியவை அறிவியல் உணர்வுக்கு

அடிப்படையாகும். இது, ஏன், எப்படி, எதற்கு என்ற வினாக்களை எழுப்புபவன், அறிவியல் உணர்வு பெற்ற வன். வழக்கத்தில் அனுசரிக்கப்பட்டு வரும் ஒரு கொள்கை, அல்லது அறிவுரை அல்லது ஒரு சமூக நிகழ்ச்சி ஆகியவற்றை வெறும் நம்பிக்கையின் அடிப் படையில் ஒப்புக் கொள்ளாது, அறிவியல் ரீதியில் விளக் கம் கோரி அவன் வினா எழுப்புவான். ஆகவே குருக்கள், மதத் தலைவர்கள் போன்ற பல பெரியோர்களின் கூற் றுக்களை அப்படியே ஏற்றுக் கொள்ளும் போக்குக்கு முர ணானது அறிவியல் உணர்வு.

தெரிந்து கொள்ள வேண்டியவை பெருமளவு இருக் கிறது என்பதை உணர்ந்தபோதிலும், உலகச் சிருஷ்டி யின் ரகசியத்தை, அற்புதங்களை மெல்ல மெல்ல அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல், மனிதனுக்கு உண்டு என்ற நம்பிக்கையைத் தன்னகத்தே கொண்டிருப்பது அறிவியல் உணர்வாகும்.

பழங்காலக் கருத்துக்கள், நம்பிக்கைகள், கொள்கை கள், விதிகளை ஒதுக்கித் தள்ளுவதின் மூலம்தான் அறிவு வளர்ச்சி ஏற்படும் என்பது அறிவியல் உணர்வின் முக் கிய அம்சமாகும். அறிவு என்பது வளர்ந்து கொண்டே வருவது. அதற்கு முடிவு இல்லை.”

இதைத்தான் பெரியார் சொன்னார். அதைத்தான் மத்திய சர்க்கார் அச்சடித்துத் ‘திட்டம்’ என்ற இதழில் வெளியிட்டிருக்கிறது. நான் இதைச் சொல்லாமல், அந்த இதழிலே வெளி வந்ததை மட்டும் படித்தால் தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக்கள் தொகுக்கப்பட்ட

ஒரு நூலிலேயிருந்து கருணாநிதி சிலவற்றைப் படித்துக் காட்டுகிறான் என்றுதான் கருதுவீர்கள்.

மேலும் அதே இதழில்-

"கடவுள் என்பது ஒரு எண்ணமே! கடவுளை உண்மைக்கு ஒப்பிடுவார்கள். அப்படியானால் அவர் இருக்க வேண்டிய இடம் கோவில் அல்ல; பரிசோதனைக்கூடம். அங்குதான் உண்மையைக் கண்டுபிடிக்கும் பணி நடக்கிறது."

இதுவும் மத்திய அரசு வெளியிட்டுள்ள அந்த 'திட்டம்' இதழில் காணப்படும் அரிய கருத்துத்தான்.

இன்னுமோர் இடத்தில்—

"இந்தியச் சமுதாயத்தில் பெரும் விஞ்ஞானிகள் கூட அடிக்கடி கோவிலையும் மதத் தலைவர்களையும் நாடுகிறார்கள். இது அறிவியல் உணர்வை வலுப்படுத்தாமல் மத சம்பந்தமான மூட நம்பிக்கைகளை வலுவாக்குகிறது. நம் நாட்டில் விஞ்ஞானிகளும் தலைவர்களும் சமூகச் சீர்திருத்த வாதிகளாக விளங்க வேண்டும்."

அதாவது விஞ்ஞானிகள் கூட கோவிலுக்குப் போகிறார்கள் என்று கேலி பேசுகின்ற இந்தத் 'திட்டம்' ஏடு, மூகாம்பிகை கோவிலுக்குப் போகின்றவர்களைப் பற்றி என்ன சொல்லும் என்பதை நீங்களே எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

மற்றுமோர் இடத்தில்—

"ஒழுக்க நெறிகளில் தெய்வீகம் எதுவும் இல்லை. இவை தனி மனிதனின் நடத்தையைப் பொறுத்தது.

மனிதனின் ஒழுக்கம், அவனுடைய கல்வி, சமூகத் தொடர்பு, அவனுக்குள்ள அனுதாப உணர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததே ஒழிய, மத அடிப்படை இதற்குத் தேவை இல்லை என்று கூறுகிறார். மரணத்திற்குப்பின் நரகலோகத்தில் தண்டனை அல்லது சொர்க்கத்தில் மோட்சம் போன்ற நம்பிக்கைகளின் அடிப்படையில் மனிதனை வாழ வைப்பது சரியல்ல.''

நீங்கள் நினைத்துக் கொள்ளலாம்; நான் படித்ததற்குக் கீழே ''பெரியார் பொன்மொழி'' என்று போட்டிருக்குமென்று; அப்படி ஒன்றும் இல்லை. திட்டம் பத்திரிகையினுடைய சிறப்பிதழில் வெளிவந்த கருத்துத்தான் இது.

பிறிதோர் இடத்தில்- அதே இதழில்-

''வீறுகொண்டு செயல்படாமல் விதியை நம்பிக் கொண்டேயுள்ள பழைய மனோபாவம் உள்ள இந்தியனுக்கு இனி இடமில்லை. கடந்த பல ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மனித சமுதாயத்தை உண்மையான முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதாக இல்லை.''

இதுவும் அந்த ஏட்டில் வெளி வந்திருப்பதுதான். இறுதியில் ஒரு பக்கத்தில் ''அறிவியல் உணர்வு-ஏன் அவசியம்'' என்ற தலைப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள்:-

''அறிவியல் உணர்வின் அத்தியாவசியமான அம்சங்களை விளக்கிய பிறகு நமது நாட்டு நிலவரத்தைச், சற்று ஆராய்வோம். காலம்சென்ற பண்டித ஜவகர்லால் நேரு, அறிவியல் உணர்வின் அவசியத்தை வற்புறுத்தி வந்த போதிலும், நாட்டில் மூட நம்பிக்கைகள், பழமை

எண்ணங்கள், பழக்க வழக்கங்கள் வளர்ந்து கொண்டே வருவதைக் காண்கிறோம். தெய்வீக அருள் பெற்றவர்கள் அற்புதச் செயல்களைப் புரிவோர் என்று கூறிக்கொண்டு ஏராளமான பேர், மக்கள் மத்தியில் உலவி வருகின்றனர். பலவகைப்பட்ட இவர்களுடைய செல்வாக்கும் பெருகிக் கொண்டே வருகிறது. மக்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளை உடனடியாக மாய வித்தையினால் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதற்கு நவீன தகவல் தொடர்புச் சாதனங்களும் பிரச்சாரக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

மனிதன் சந்திர மண்டலத்திற்குள் சென்று திரும்பி வரும் இந்தக் காலத்தில் கோள்களின் சஞ்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஜோதிடம், அல்லது கை ரேகை சாஸ்திரம், அல்லது எண் ஜோதிடம் ஆகியவற்றில் மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. நமது பண்டைய வரலாற்றில் குறுகிய சாதிப் பற்று மேலோங்கி இருந்ததாகவும் இடைக்காலத்தில் வகுப்பு வெறி தலைவிரித்தாடியதாகவும் வரலாறு எழுதப்பட்டது.

அறிவியலுக்குப் புறம்பான இத்தகைய நம்பிக்கைகள் எவ்வாறு ஏற்பட்டன என்பதை அறிந்து கொள்ள வேண்டியது முக்கியம். எனினும் அவை இன்னும் நீடித்து அதனால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகளையும், பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள வேண்டியது அதைவிட முக்கியம். பெரும்பான்மையான மக்களின் சொந்த வாழ்க்கை நிலையுடன் பொருந்தி இருப்பதன் காரணமாகத் தான் இந்த நம்பிக்கைகள் நீடிக்கின்றன. சமூகக் கலாசார நெருக்கடியில் மனிதனிடம் தன்னம்பிக்கையையும், உற்சா

கத்தையும் உண்டாக்க அறிவியல் உணர்வு பயன்பட வேண்டும். சமநீதி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்.''

இத்தனையும் மத்திய அரசினுடைய செய்தித்துறை அமைச்சகத்தின் சார்பில் ஆங்கிலத்திலும், இந்தியிலும் ''யோஜனு'' என்றும், தமிழில் ''திட்டம்'' என்றும் வெளியிடப்பட்ட இதழில் வந்துள்ள கருத்து.

அதில் ஒரு பிரதி என் கைக்குக் கிடைத்தது. அதனைப் படிக்கப் படிக்க ஒவ்வொரு பக்கத்திலும் அறிவியக்கக் கருத்துகளின் முக்கியத்துவம் விளக்கப்படும் தொகுப்பாகத்தான் அந்த இதழ் வெளியிடப்பட்டிருக்கிறது. எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி எல்லாம் 2,500 ஆண்டுகளுக்கு முன்னல் புத்தர் எந்தக் கொள்கையைச் சொன்னரோ—அப்படி அந்தக் கொள்கைகளைச் சொன்ன புத்தரைத் தெய்வமாக ஆக்கி அவருடைய கொள்கைகளை அழித்து விட்டார்கள். ''கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக'' என்று சொன்ன வடலூர் வள்ளலாரைத் தெய்வமாக ஆக்கி அவருடைய கொள்கைகளை அழித்துவிட்டார்கள். ''தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த நான் ஆலயத்திற்குள் போகக் கூடாதா'' என்று கேட்ட நந்தனைத் தெய்வமாக ஆக்கி அவனுடைய கொள்கைகளை அழித்துவிட்டார்கள். நம் நாட்டிலே இருக்கின்ற மூட நம்பிக்கையாளர்களின் மிகப்பெரிய கெட்டிக்காரத்தனம், திறமை அவர்கள் பெற்றிருக்கின்ற ஆற்றல்-யார் முற்போக்கான சீர்திருத்தக் கருத்துகளைச் சொல்லுகிருர்களோ, அவர்களையே தெய்வங்களாக ஆக்கி அவர்களுடைய கொள்கைகளை அழித்துவிடுவது தான்.

"நட்ட கல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாற்றியே
சுற்றி வந்து மொணமொண வென்று சொல்லும்
மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ, நா தன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?''

என்று கேட்டார் சிவவாக்கியர். அவரே அப்படிக் கேட்டிருக்கிறரே என்று நாம் சொன்னல் அவர்கள் எல்லாம் தெய்வங்கள் என்று அவர்களைத் தெய்வங்களாக ஆக்கி அவர்கள் சொன்ன கருத்துகளை அழித்துவிட்டார்கள்.

ஆனல் அந்த ஆபத்தில் சிக்காமல் தப்பித்துக் கொண்டு ஒரு பேரியக்கத்தை இன்று உயிரோடு நடமாட விட்டிருப்பவர்தான் தந்தை பெரியார். காரணம் யாரும் அவரைத் தெய்வமாக ஆக்கவில்லை. ஆக்கினலும் அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார். அதனல்தான் அவருடைய உடலைக் கூட நாம் இங்கே பத்திரமாக வைத்து விட்டோம். இல்லாவிட்டால் அவரையே கூட தெய்வமாக ஆக்கிவிட்டு அவருடைய கொள்கைகளை அழித்து விடக்கூடும் என்கின்ற அச்சம். அதன் காரணமாகத்தான் ஆரம்பகாலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து இத்தகைய கருத்துகளை சொன்னவர்களையெல்லாம் தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்று சொல்லிச் சொல்லி, அவர்களுடைய கொள்கைகளையெல்லாம் அழித்து விட்டார்களோ; அப்படி ஒரு ஏழெட்டு ஆண்டுகாலமாக அல்லது பத்தாண்டுகாலமாக தமிழகத்தில் தந்தை பெரியாருடைய கொள்கைகளை, அறிஞர் அண்ண அவர்களுடைய இலட்சியங்களைக், கொள்கைக் கோட்பாடுகளை அவர்களை உயர்த்திக்

கொண்டே அழித்துக் கொண்டு வருகின்ற செயல் தமிழகத்தில் நடை-பெற்றுக் கொண்டிருக்கிறது.

எங்கே? யாரால்? என்று நீங்கள் என்னைக் கேட்க மாட்டீர்கள். நானும் சொல்லத் தேவை இல்லை.

ஆனால் அந்த விபத்திலே இருந்து பெரியாரையும் அண்ணாவையும் காப்பாற்றுகின்ற பணியைத்தான், நானும் வீரமணி போன்றவர்களும் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் நான் உறுதியோடு இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

தந்தை பெரியார் அவர்களுடைய பெயரைச் சொல்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சொல்கிறார்கள். இருக்கிற ஆபத்தே, என்னுடைய இளவல் தளபதி வீரமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல "நாங்கள் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் விரோதிகள் என்று அறிவித்துவிட்டு வாருங்கள். பெரியாருடைய கொள்கைகளை, அறிஞர் அண்ணாவினுடைய கொள்கைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; பெரியாரிடமிருந்தும், அண்ணாவிடமிருந்தும் நாங்கள் மாறுபடுகிறோம்" என்று சொல்லிவிட்டு வாருங்கள். நேருக்கு நேர் நிற்போம். ஆனால் நீங்கள் பெரியாருடைய பெயரையும், அண்ணாவினுடைய பெயரையும் சொல்லிக்கொண்டு இதுதான் பெரியாருடைய கொள்கை; இதுதான் அண்ணாவினுடைய கொள்கை என்று சொல்லி மக்களை ஏமாற்றுகின்றீர்கள். எனவே தான் உங்களுடைய மாயையிலிருந்து மக்களை விடுவிப்பது எங்களுக்குச் சிரமமாக இருக்கிறது. நீங்கள் தீரர்களானால்,

நாங்கள் பெரியாருக்கு மாறுபட்டவர்கள்; நாங்கள் அண்ணுவுக்கு மாறுபட்டவர்கள்; அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று கூறிவிட்டு வாருங்கள். உங்களைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிருேம் என்று வீரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைத்தான் மீண்டும் வலியுறுத்திச் சொல்கின்றேன்.

நான் அடிக்கடி சொல்லுவதுண்டு. பச்சைப் பாம்பும் பச்சைக் கொடியும் பின்னிக் கொண்டிருக்கும் பொழுது எது பாம்பு, எது கொடி என்று தெரியாமல் தவிக்கின்ற நிலை ஏற்படுவதைப்போல இன்றைக்குத் தமிழகத்திலே நாமும் திராவிடர் இயக்கம்; அதைப் போலவே ஆளுகின்ற தரப்பாரும் திராவிடர் இயக்கம். எனவே, இதில் பச்சைக்கொடி எது? பச்சைப் பாம்பு எது? என்று தெரியாமல் பச்சைக்கொடியாக உண்மையான திராவிடர் இயக்கமாக நாம் இருக்கிற நேரத்தில் பச்சைப்பாம்பு பச்சையாகத்தான் இருக்கிறது என்று கருதி ஏமாறுகிற பாமர மக்கள் தொடர்ந்து ஏமாந்து கொண்டே வருகின்ற பரிதாபகரமான காட்சியைத் தமிழகத்தில் இன்றைக்கு நாம் பார்த்து வருகின்ருேம்.

வீரமணி அவர்கள் உரையாற்றும்போது ஒன்றைச் சொன்ஞர்கள். நாளைய தினம் இதே இடத்தில் இட ஒதுக்கீட்டிற்கான மாநாடு. அது குறித்த கருத்துகளை வெளியிடுகின்ற மாநாடு, முடிவுகளை மேற்கொள்கின்ற மாநாடு நடைபெற இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதற்கு முன்பே இப்போதே ஒன்றைச் சொன்ஞர்கள். நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் நேற்று சட்ட

மன்றத்திலே விடுத்துள்ள அறிவிப்பு இந்த மாநாட்டிற்கு ஒரு வெற்றி முகப்பாகவே அமைந்திருக்கிறது என்று வீரமணி அவர்கள் சொன்னார்கள்.

எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம், கடந்தகால அனுபவத்தையொட்டி எனக்கு ஏற்படுகிற அச்சமெல்லாம், நாவலர் சொல்லி விட்டாலே அது அரசாங்கத்தினுடைய முடிவாக ஆகிவிடுமா என்பதுதான்.

ஏனென்றால் சட்டமன்றத்திலே பலமுறை பல்வேறு பிரச்சினைகளில் நாவலர் அவர்கள் இது போன்ற உறுதி மொழிகளைத் தந்தார்.

ஆனால் அடுத்த நாள்- அல்லது அதற்கு அடுத்த நாள்-சட்டமன்றத்திற்கு வந்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், நாவலர் சொன்னாலும் சரி, பண்ருட்டி சொன்னாலும் சரி, நான் அவைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. அமைச்சரவை என்பது ஒரு கூட்டுப் பொறுப்பு. ஆனாலும்கூட இந்த அறிக்கையைக் குறித்துச் சட்டமன்றத்திலே விவாதிக்கலாம் என்று நாவலர், பண்ருட்டி ராமச்சந்திரன் இவர்களெல்லாம்தந்த வாக்குறுதிகள் மறுநாள் முதலமைச்சர் வந்த பிறகு மாற்றப்பட்டு, அவர்கள் அப்படிச் சொல்லி இருந்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று முதலமைச்சரே சட்டமன்றத்தில் அறிவித்த நிகழ்ச்சிகள் பல உண்டு.

அது வீரமணி அவர்களுக்கும் தெரியும். தெரிந்தாலும் கூட அவர் இன்றைக்கு முன்கூட்டி நன்றி கூறியிருப்பதற்குக் காரணம், 'கமிட்' பண்ண வைப்பது

என்பார்களே, அதைப்போல சர்க்காரை 'கமிட்' பண்ண வைக்கிறுர் என்றுதான் நான் எண்ணுகிறேனே அல்லாமல், நம்புகிறுர் என்று நான் எண்ணிக் கொள்ள வில்லே.

50 சதவிகித இட ஒதுக்கீட்டிற்காக நாங்கள் நிச்சய மாக வாதாடுவோம், போராடுவோம், அதிலே நாங்கள் அழுத்தம் திருத்தமாக நிற்போம் என்று நாவலர் கூறி யிருப்பதாக ஏடுகளிலே வெளிவந்திருக்கிறது.

ஆனுல் கடந்த கால வரலாற்று நிகழ்ச்சிகளேப் பார்த் தால் இந்த இட ஒதுக்கீட்டிற்குத் தமிழகத்தைப்பொறுத்த வரையிலே எப்பொழுது ஆபத்து வந்தது?

வீரமணி அவர்கள் அழகாக அருமையான ஆதா ரங்களே அள்ளிக்கொட்டி, புள்ளி விவரங்களேக் குறித்து இங்கே ஒரு நூலே என்னேக் கொண்டு வெளியிடச் சொல்லி, மதுரை ஆதீனகர்த்தர் அவர்கள் அதனேப் பெற்றுக் கொண்டிருக்கிறுர்கள். வகுப்புவாரி உரிமை யினுடைய வரலாறு குறித்த - கம்யூனல் ஜி. ஒ. வினு டைய வரலாறு குறித்தது அந்த நூல்.

அதிலே 1926-27ஆம்ஆண்டில் மூதறிஞர் முத்தையா அவர்களுடைய காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த இட ஒதுக்கீடு, இடையிடையே பல்வேறு விதமான பேராபத்து களுக்கு ஆளாகி, அந்தக் கண்டங்களிலெல்லாம் தப்பித் தப்பி, 1950ஆம்ஆண்டில் இடஒதுக்கீடு அரசியல் சட்டத் தின் அடிப்படையில் செல்லாது என்று அல்லாடிகளெல் லாம் அன்றைக்கு வாதம் செய்து, உயர்நீதி மன்றத்தி லும் நம்முடைய பிற்படுத்தப்பட்டச் சமுதாயத்தை-

தாழ்த்தப்பட்டச் சமுதாயத்தைக் காப்பாற்றக் கூடிய இட ஒதுக்கீடு முறைக்குத் தீர்ப்பளிக்கப்படுகிற நேரத்திலே ஆபத்து ஏற்பட்டு, அதற்குப் பிறகு உச்சநீதி மன்றத்திலும் அதே ஆபத்து நிலைநிறுத்தப்பட்டு, அதற்குப் பிறகு தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணு அவர்களும் அன்றைக்குத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் என்ற பெயரில் இரு இயக்கங்களாக இருந்தாலும் கூட, திராவிட முன்னேற்றக்கழகம் தொடங்கிய காலத்திலே அண்ணு அறிவித்ததைப் போல் அந்தப் பிரச்சினையிலும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருந்து பாடுபட்டுப் பணியாற்றிப் போராடி வாதாடி நாம் தமிழகத்திலே எழுப்பிய புயலின் காரணமாக, பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் அரசியல் சட்டத்திலே முதல் திருத்தத்தைக் கொண்டு வந்தார். இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தில் இதுவரையிலே ஐம்பதுக்கு மேற்பட்ட திருத்தங்கள் வந்திருக்கின்றன என்ருலும், முதல் திருத்தம் தந்தை பெரியார் அவர்களால், அண்ணு அவர்களால் நாம் நடத்திய போராட்டத்தால்தான் உருவாக்கப்பட்டது என்கின்ற வரலாற்றை நீங்கள் யாரும் மறந்துவிடக்கூடாது.

அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் சமுதாயத்திலே இட ஒதுக்கீடு தேவை என்பதை வலியுறுத்துவதாகும். அது எந்த அடிப்படையிலே என்ருல் பொருளாதார அடிப்படையிலே அல்ல. சமூக அடிப்படையில், கல்வி அடிப்படையில் — Socially and Educationally என்ற சொற்ருெடரோடு அந்த அரசியல் சட்டத் திருத்தம் இந்திய அரசியல் சட்டத்திலே முதன் முதலாக ஏறியதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அதற்குப் பிறகு மெல்ல மெல்ல அந்த உரிமைகள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தாழ்த்தப்பட்டச் சமுதாய மக்களுக்குக் கிடைத்து-ஆனாலும் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்கின்ற உணர்வு கொந்தளித்துக் கொண்டிருந்த போது, அண்ணா அவர்களுடைய மறைவுக்குப்பின் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதொடர்ந்த அந்தக் காலத்தில், அண்ணாவின் அடியொற்றிப் பொறுப் பேற்றுக் கொண்ட நான், தந்தை பெரியார் அவர்களுடைய ஆலோசனைகளை அடிக்கடி கேட்டுச் செயல்படுகிறவனாகவும் இருந்த காரணத்தினால், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நல மேம்பாடுகளைக் கவனித்து அரசின் சார்பில் ஆவன செய்ய ஒரு குழுவை, திருவாளர் சட்டநாதன் அவர்களது தலைமையில் அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளெல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டுப், பிற்படுத்தப்பட்டோருக்கு இருபத்தைந்து சதவிகிதம் என்றிருந்ததை 31 என்றும், தாழ்த்தப்பட்டவருக்கு 16 சதவிகிதம் என்றிருந்ததை 18 என்றும் உயர்த்தி ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

பிறகு, கழக ஆட்சி நெருக்கடிக் காலச் சட்டத்தை எதிர்த்ததின் காரணமாகச் சோதனைக்கும் வேதனைக்கும் ஆளாகிக் கவிழ்க்கப்பட்டதற்குப் பிறகு, அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்களுடைய தலைமையிலே அ.தி.மு.க ஆட்சி உருவான பிறகு 79ஆம் ஆண்டில், 9000 ரூபாய் உச்ச வரம்பு. 9000 ரூபாய் வரையிலும் வருமானம் உள்ளவன் தான் பிற்படுத்தப்பட்ட சமுதாயம். 9001 ரூபாய் அவனுக்கு வருமானம் வந்தாலும், அவன்

முன்னேறிய சமுதாயம் என்கின்ற ஓர் அதி அற்புத மான, அதிசயமான, கோமாளித்தனமான ஓர் ஆணை 79ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது.

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஏன் இந்திரா காங்கிரஸ் கட்சியிலே உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்— இத்தனைக் கட்சிகளும் அன்றைக்கு ஒருங்கிணைந்து தமிழ கம் முழுவதும் ஒரு பெரும் கிளர்ச்சியை நடத்தின.

திராவிடர் கழகத்தின் சார்பில் தளபதி வீரமணி அவர்களுடைய அறிவிப்பிற்கிணங்க அந்த ஆணையே கொளுத்தப்பட்டு, கொளுத்தப்பட்ட அந்த ஆணை உத்தர வினுடைய சாம்பல் கோட்டைக்கு அனுப்பி வைக்கப் பட்டது. நூற்றுக்கணக்கான இடங்களிலே இருந்து அந்தச் சாம்பல் பொட்டலங்கள் சென்றபோது, இன்று மகிழ்கிறோமே நிதி அமைச்சர் நாவலர் சொன்னரென்று, அந்த நாவலர், நிருபர்களிடத்திலே "நிறையப் பேர் இப்படிச் சாம்பல் பொட்டலங்களை அனுப்பி வைத்திருக் கிறார்கள். அவைகளையெல்லாம் கோட்டையிலே உள்ள குரோட்டன்ஸ் செடிகளுக்கு நாங்கள் எருவாகப் போடு வோம்" என்று சொன்னர்.

எந்த எரு போட்டு நாங்களெல்லாம் வளர்ந்தோம் என்பதை மறந்துவிட்டு, எந்த எரு போட்டு இந்த இனம் வளர்ந்தது என்பதை மறந்துவிட்டு, எந்த உரம் போட்டு இந்த இயக்கம் இன்றைக்கு உயர்ந்திருக்கிறது என்பதை மறந்துவிட்டு, எந்த உரம் போட்டு, எந்த எரு போட்டு இத்தகைய எழுச்சியைத் தாழ்த்தப்பட்ட—பிற்

படுத்தப்பட்டவர்கள் பெற்று இருக்கிருர்கள் என்பதை மறந்துவிட்டு, நாவலர் அவர்கள் அந்தச் சாம்பலே எல்லாம் கோட்டையிலே உள்ள குரோட்டன்ஸ் செடிகளுக்கு எருவாகப் போடுவோம் என்று சொன்னுர். அவர் மறந்து விட்டார் ஈரோட்டு எரு போட்டு வளர்ந்த எழுச்சி மிக்க இயக்கம் இந்த இயக்கம் என்பதையும், அந்த இயக்கத்தினுடைய முன்ஞேடி தளபதிகளிலே ஒருவராக நாவலர் அவர்களும் இருந்தார்கள் என்பதையும் மறந்து விட்டார். காரணம் சேருவார் தோஷம் என்பார்களே அதன் காரணமாக அப்படிச் சொன்னுர்.

அந்தப் போராட்டம் மேலும் விரிவடைந்தது. நாடு தழுவிய போராட்டமாக ஆனது. பாராளு மன்றத் தேர்தல் வந்தது. மக்கள் தங்கள் தீர்ப்பை அளித்தார்கள். தி.மு.கழகம் ஒரு மறியல் போராட்டத்துக்கு நாள் குறித்து அறிவித்தது. அதற்குப் பிறகு 31 சதவிகிதம், 50 சதவிகிதம்— என்கின்ற அளவிற்கானது.

அப்படி ஆன பிறகும்கூட முதலமைச்சருக்கு இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையிலே இதய சுத்தியான எண்ணம் உண்டா என்ருல் இல்லே; இல்லவே இல்லே. இன்றைக்கும் இல்லே.

சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்ருர்கள். 50 சதவிகிதம் அளிக்கப்பட்டிருப்பது தவறு. அதை அகற்ற வேண்டுமென்று, இட ஒதுக்கீட்டுக்கு எதிரியாகச் சில பேர் உச்ச நீதிமன்றம் வரையிலே சென்ருர்கள். உச்ச நீதிமன்றத்திலே அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழு ஒன்றை அமைக்க

இந்த அரசு முன் வந்தது. அந்தக் குழுவிற்கு திரு. அம்பாசங்கர் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அம்பாசங்கர் தலைவராக நியமிக்கப்பட்ட அடுத்த சில நாட்களுக்கெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாரதிவிழா ஒன்றில் பேசுகிறார். 17-12-82ல்! அதற்கு ஒரு ஐந்து நாட்களுக்கு முன்புதான் அம்பாசங்கர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எதற்காக? இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். 50 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை செல்லாது, இட ஒதுக்கீடு தகுதி–திறனையெல்லாம் கெடுத்துவிடும், என்கின்ற அளவிலே சுப்ரீம்கோர்ட்டிலே வழக்கு; உச்ச நீதிமன்ற நீதிபதி அது குறித்துத் தீர்ப்பளிப்பதற்கு முன்பு ஒரு குழு அமைத்து விவரங்களைத் தாருங்கள் என்று தமிழக அரசுக்குச் சொல்லுகிறார். தமிழக அரசு அம்பாசங்கர் தலைமையிலே ஒரு குழுவை நியமிக்கிறது. அந்தக் குழு நியமிக்கப்பட்ட ஐந்தாவது நாளோ அல்லது ஆறுவது நாளோ 17-12-82இல் முதலமைச்சர் எம். ஜி. ஆர், பாரதி விழாவிலே பேசுகிறார்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய இட ஒதுக்கீட்டு முறைக்கு ஆதரவாகப் பேசினாரா? இல்லை.

"வருமான வரிசெலுத்த வேண்டாதவர்களைப் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகக் கருதி அவர்களுக்குச் சலுகைகள் அளிக்க ஒரு திட்டம், தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளது."

(இதைவிட ஆபத்து வேறு என்ன இருக்க முடியும்?)

தமிழ்நாட்டில் வருமானவரி கட்டுகின்றவர்கள் நூற்றுக்கு இரண்டு பேர் அல்லது மூன்றுபேர் தான் இருப்பார்கள். எம். ஜி. ஆரினுடைய கணக்குப்படி வருமான வரி கட்டாதவர்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றால் மீதமுள்ள 97 சதவிகிதம் அவர்கள் பிற்படுத்தப்பட்டோராக இருந்தாலும் முதலியாராக இருந்தாலும் செட்டியாராக இருந்தாலும் பார்ப்பனராக இருந்தாலும் அந்த 97 பேரும் இந்த இட ஒதுக்கீட்டிற்கு உரியவர்கள்.

எனவே, பொருளாதாரத் துறையில் வருமானவரி கட்டுகிறவன், வருமான வரி கட்டாதவன் என்று பிரித்து, வருமான வரி கட்டாதவர்கள்தாம் பிற்படுத்தப்பட்டோர் என்று அறிவித்து, அவர்களுக்குச் சலுகைகளை வழங்க அரசு யோசிக்கிறது என்று சொன்னார்.

அதே விழாவில் இன்னொன்றையும் சொன்னார்.

''தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப்பயிற்சிக் கொடுத்து மற்றவர்களுடன் போட்டியிடச் செய்யலாமே ஒழிய—தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு கூடாது என்று எங்கள் அமைச்சரவை விரும்புகிறது.''

இதைவிட வேதனை என்ன இருக்க முடியும்? இவரே ஒரு குழுவை நியமித்துவிட்டு, உச்சநீதிமன்றத்தில் இந்த அரசின் ஆணைக்கு எதிராகப் போடப்பட்ட வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அரசுக்குச் சார்பாக ஒரு குழுவினுடைய அறிக்கையைப் பெறவேண்டிய முதலமைச்சரே, அரசாங்கத்தினுடைய உத்தரவுக்குப் பாதகமாக

அந்தக் குழுவின் தலைவர் செயல்பட வேண்டும் என்று மறைமுகமாகத் தூண்டி விடுகின்ற அளவிற்கு, பாரதிவிழா வில் பிற்படுத்தப்பட்டோர் என்றால் பொருளாதார அடிப்படைதான்; வருமான வரி கட்டுவோர், கட்டாதவர் என்ற அடிப்படையில்தான்; தாழ்த்தப்பட்டோர் என்றால் அவர்களுக்குப் பயிற்சிக் கொடுத்து ஊக்கப்படுத்தலாமே யல்லாமல், அவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பதே கூடாது என்று அறிவிக்கின்ற ஒரு முதலமைச்சரை நாம் பெற்றி ருக்கின்றோம். அவரை நம்பி நாவலரும் நேற்றைக்கு அறி வித்திருக்கிறார். நாவலரை நம்பி நாமும் இன்றைக்கு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றோம். எதிர்காலம் என்ன ஆகுமோ தெரியவில்லை; இருளாகத் தெரிகிறது.

ஆனாலும் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. இன் றைக்கு எந்த முடிவுகள் எடுத்தாலும், இட ஒதுக்கீட்டு முறைக்கு எந்த ஆபத்து வந்தாலும்,நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ''கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா'' என்பதைப் போலத் தமிழ கத்தை குஜராத் என்று நினைத்தாயோ என்று கூறு கின்ற அந்த விடுதலைப்படையாகத் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இருக்கும் என்பதை மாத்திரம் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கி றேன்.

ராஜீவ் காந்தி சொல்லியிருக்கிறார். பத்திரிகை களிலே வந்திருக்கிறது. 'இந்த இட ஒதுக்கீட்டு பிரச் சினையில் அகில இந்திய அளவில் சிந்தித்து ஒரு முடி வெடுக்கலாம்' என்ற கருத்தை அவர் சொல்லியிருக்கிறார்.

இட ஒதுக்கீட்டில் பெரியாருடைய எண்ணம் என்ன? அண்ணாவினுடைய எண்ணம் என்ன? அவர்களுடைய எண்ணம் எந்த அளவுக்கு இந்தத் தமிழகத்திலே ஊன்றப்பட்டுக் கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் அந்த வழியை வளர்த்து வருகிறோம். அப்படி பக்குவப்படுத்தப்பட்ட மண்ணில் குஜராத் சேட்டைகள், குஜராத்தில் நடத்தப்பட்ட குரங்காட்டங்கள் இங்கே நடைபெறுமேயானால், நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், குஜராத்தில் இட ஒதுக்கீடு வேண்டாம் என்றவர்கள் ஒரு முதலமைச்சரை நீக்க முடிந்தது. ஆனால், தமிழகத்தில் அதற்கு நேர்மாறாக இட ஒதுக்கீடு வேண்டும் என்பவர்கள் ஒரு முதலமைச்சரை நிச்சயமாக வீட்டிற்கு அனுப்புவார்கள் என்பதை மாத்திரம் நான் இந்த மாநாட்டிலே எச்சரிக்கையாக எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அண்ணாவினுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு நடைபெறுகிற ஆட்சியில் அண்ணா சொன்ன கருத்துக்களை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

50-ஆம் ஆண்டு இந்த இட ஒதுக்கீட்டு முறைக்கு அல்லாடி போன்றவர்களால் ஆபத்து வந்தபோது அண்ணா 'திராவிட நாடு' பத்திரிகையில் எழுதினார்.

"உள்ளது ஒரு கம்பு—இருவர் கேட்கின்றனர்; எனக்கு, உனக்கு என்று.

ஒருவன், கரடு முரடான பாதையிலே கடும் வெயில் வேளையிலே, பாரமான சாமானைச் சுமந்து வந்ததால்,

களைத்துக் கால் கடுத்துப் போய் ஊன்றுகோல் கிடைத் தால் ஒழிய நடந்து செல்ல முடியாத நிலையில் உள்ள வன். மற்றவனோ உல்லாச நடை நடக்கும்போது அந்தக் கம்பு தன்னிடமிருந்தால் அலங்காரமாக, அந்தஸ் தாக இருக்குமென்ற எண்ணத்துடன் இருப்பவன்—இரு வரில், கம்பு—யாருக்குத் தரப்பட வேண்டும்?''

நடக்கக் கஷ்டப்படுகின்ற அந்தப் பாட்டாளிக்கு ஊன்றுகோலாக கம்பைத் தருவதா? அல்லது உற்சாகத் திற்காக—உல்லாசத்திற்காக அலங்காரமாகக் கையிலே சுழற்றிக் கொண்டு போகின்ற கனவானுக்குக் கம்பைத் தரு வதா? அண்ணா அன்றைக்கே கேட்டார். அந்தக் கம்பு தான் இட ஒதுக்கீடு—கம்யூனல் ஜி. ஓ. - என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இதை யாருக்குத் தரப் போகிறோம்'' ஐம்பதிலே அண்ணா இந்தக் கேள்வியை எழுப்பினார் ''திராவிட நாடு'' ஏட்டின் மூலம்.

வடசென்னையிலே தந்தை பெரியார் அவர்கள் இந்தக் கொள்கைக்கு ஆபத்து வந்த நேரத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் போர் முழக்கம் செய்தார். அதைத் தொடர்ந்துதான் இடைக்காலத்திலே ஒரு பெரு வெற்றி யினை—இட ஒதுக்கீட்டில் நாம் பெற முடிந்தது.

சமூக நீதியைப் பற்றி அறிஞர் அண்ணா மிக அழ காகக் குறிப்பிடுகிறார்.

''ஓநாயை, வேட்டைக்காரன் கொன்று விடாமல் பாதுகாப்பது அல்ல நீதி. ஓநாய், ஆடுகளைக் கொன்று விடாமல் பாதுகாப்பதுதான் நீதி.''

எவ்வளவு பொருள் பொதிந்த வாசகம்.

இந்த நீதியைத்தான் இன்றைக்குத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் உங்கள் மத்தியிலே எடுத்து வைக்கின்றது.

அண்ணா, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அமைச்சர்களுக்குச் சொன்ன வாசகம், இன்றைக்குள்ள அமைச்சர்களுக்கும் பொருந்தும்.

நான் சரித்திரத்தை உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டுமேயானால், அன்றைக்கு சென்னை மாகாணம்-தமிழ்நாடு அல்ல—இந்தச் சென்னை மாகாணத்திலே இருந்த காங்கிரஸ் அமைச்சர்கள் கூட இட ஒதுக்கீட்டு முறைக்கு அல்லாடியால் ஆபத்து வந்தபோது பதைத்துப் போனார்கள். காமராசர் கூட பதைத்தார். ஆனால் "பெரியாருக்கு இதிலே என்ன கவலை? நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று கூடச் சொன்னார். அதற்குப் பெரியார் கூட பெரம்பூர் பொதுக் கூட்டத்தில், எனக்கு இல்லாத கவலை இதிலே யாருக்கு என்று காமராசருக்குப் பதிலளித்தார்.

அண்ணா அவர்கள், அன்றைக்குக் காங்கிரஸ் அமைச்சர்களே கூட இட ஒதுக்கீட்டுமுறைக்கு ஆதரவாக இருந்தாலும் அவர்களை எச்சரிக்கை செய்ய இவ்வாறு எழுதினார்.

"அமைச்சர்கள், சட்டசபையிலேயும், வெளியிலேயும் இந்தக் 'கம்யூனல் ஜி.ஓ.' வைப் பலமாக ஆதரித்துள்ளனர். எனவே, இந்தத் திட்டம் அழியாதபடி பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. அந்தப் பொறுப்பை மறப்பது பண்பாகாது. தட்டிக்

கழித்துவிட முயல்வது ஆண்மையாகாது. நாம் என்ன செய்வது என்று பேசுவது அறிவுடைமை ஆகாது. உள்ள உறுதியுடன் அமைச்சர்கள் இந்த நிலையை மாற்றி அமைக்க வழி கண்டாக வேண்டும். இப்போதாகிலும், இடிமேல் இடிபட்ட பிறகாவது, யார் வகுப்புவாதிகள்—எது வகுப்புவாதம்—என்று நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற முன்வர வேண்டும்.''

என்று அண்ணு அன்று அமைச்சர்களுக்குச் சொன்னது இன்றும் பொருந்துகிறதா இல்லையா என்று எம்.ஜி.ஆரை அல்ல; நாவலரையும் அவரைப்போல் இந்த இட ஒதுக்கீட்டு முறையில் இதயமார்ந்த எண்ணம் கொண்டிருக்கின்ற வேறுபல அமைச்சர்களையும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் சொன்ஞர்.

“மாகாண சர்க்கார், மக்களின் எதிர்காலத்துக்காக-வகுப்புநீதிக்காக, எவ்வளவு கஷ்ட நஷ்டத்தையும் ஏற்கத் தயார் என்று டெல்லி உணரும்படி செய்யவேண்டும்.

பதவியை உதறித் தள்ளும் துணிவு ஏற்பட வேண்டும் இந்த அமைச்சர்களுக்கு; இவர்களிடம் நாடு இவ்வளவும் எதிர்பார்க்கிறது; தன்மானத்தை இழக்காதிருக்க வேண்டுமென்று கூறுகிறது—என்ன செய்யப் போகிருர்கள்?''

என்று அண்ணு அன்றைக்கு இட ஒதுக்கீட்டு முறைக்கு ஆதரவு தந்த காங்கிரஸ் அமைச்சர்களைப் பார்த்து இவ்வளவு கடுமையாக எச்சரித்தார். அந்த எச்சரிக்கை

இன்றைக்கும் பொருந்தும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகின்றேன்.

இடையிலே, நேர்முகத் தேர்வு இனி இல்லை. நுழைவுத் தேர்வுதான் என்கின்ற ஒரு சங்கடம் புகுத்தப் பட்டபோது, அப்போதும் திராவிடர்கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலனில் அக்கறையுள்ள வேறு பல கட்சிகளைச் சார்ந்த பெரியவர்கள் இந்த நுழைவுத் தேர்வு வேண்டாம் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

நான் தொடர்ந்து 'விடுதலை' பத்திரிகை படிப்பவன். நீங்கள் எத்தனை பேர் படிக்கிறீர்களோ எனக்குத் தெரியாது. நான் தொடர்ந்து படிப்பவன்; வராவிட்டாலும் தொலைபேசி மூலமாக கேட்டுப் பெற்றுப் படிப்பவன்.

17-4-82இல் திருச்சியில் பெரியார் பெண்கள் மருந்தியல் கல்லூரி திறப்புவிழா. அதில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் பேசுகிறார். என்ன பேசுகிறார் தெரியுமா?

"நேர்முகத் தேர்வை ஒழித்துவிட்டு, நுழைவுத் தேர்வு வைக்கும் யோசனை எதுவும் எங்கள் அரசிடம் இல்லை. நுழைவுத் தேர்வு வைத்தால் பட்டினத்து மாணவர்கள் மட்டும்தான் பயனடைவார்கள். கிராமத்திலிருந்து படிக்கவரும் மாணவர்களுக்கும் முதல் தலைமுறையாகப் படிக்கவரும் மாணவர்களுக்கும் நுழைவுத் தேர்வு என்பது பெரும் இடையூறாக இருக்கும். எனவே தற்போதுள்ள நேர்முகத் தேர்வு (இண்டர்வியூ) முறையே நீடிக்கும்."

இது டாக்டர் ஹண்டே 82ஆம் ஆண்டு பெரியார் பெண்கள் மருந்தியல் கல்லூரி விழாவில்-அது வீரமணி அவர்கள் முன்னின்று நடத்திய விழா-அதற்காகப் பேசினரோ என்னவோ—அங்கு டாக்டர் ஹண்டே இந்தக் கருத்தைச் சொல்லி இருக்கிருர்.

ஆனல் அதை மறுத்துக் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் என்ன பேசினர் தெரியுமா?

"நுழைவுத் தேர்வால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்" என்று.

ஹண்டே சொல்கிருர், பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் கிராமப் புறத்து மாணவர்களும் இந்த நுழைவுத் தேர்வால் பாதிக்கப்படுவார்கள் என்று. அவர் கழற்றிப் போட்ட பூணூலை எடுத்து அரங்கநாயகம் போட்டுக் கொண்டு, "இந்த நுழைவுத் தேர்வால் தாழ்த்தப்பட்ட — பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்" என்று இவர் பேசுகிருர் என்ருல், ஏ! தாழ்ந்த தமிழகமே! என்று அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணு பேசினரே அந்த சொற்றெடர் நமக்கு நினைவுக்கு வரவில்லையா? இதைத்தான் நான் உங்களைக் கேட்கிறேன்.

அப்படிப்பட்ட ஓர் இன உணர்வற்ற ஒரு அரசு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுடைய எதிர்காலத்தைப் பற்றி ஒழுங்காகச் சிந்திக்காத அல்லது சிந்திக்க எண்ணிடாத ஒரு அரசு இன்றைக்குத் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் சொல்கின்றேன்.

குஜராத் சம்பவங்களையொட்டி 'இந்தியா டுடே' பத்திரிக்கையில் ஒரு கருத்து எழுதப்பட்டது. 15-4-85 இல் அந்தக் கருத்தை எழுதும்போது அந்த பத்திரிகையிலே சொல்லுகிருர்கள்.

"The Anti-reservation feeling had already been perked up by Prime Minister Rajiv Gandhi's rather cryptic statement at Hyderabad that-reservation had been provided for a certain purpose which they have failed to serve and the whole question requires a new look"

சமீபத்தில் ஐதராபாத்தில் இட ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பாக ராஜீவ்காந்தி அவர்கள் பேசிய அதிர்ச்சி தரக்கூடிய பேச்சினுல் தான் இவைகளெல்லாம் விளைந்தது என்று சொல்லிவிட்டு, இதை அகில இந்தியா தழுவிய ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொண்டு இதற்கு ஒரு புதிய பார்வை — ஒரு புதிய திருப்பம்-ஒரு புதிய கண்ணேட்டம் இவைகளோடு இந்த இட ஒதுக்கீட்டைக் காண வேண்டும் என்று ராஜீவ் காந்தி சொன்னரே அதுதான்—அவர்தான் இப்படிப்பட்ட பிரச்சினைகளுக் கெல்லாம் வித்திட்டார்' என்று குற்றம் சாட்டுகின்ற வகையில் 'இந்தியா டுடே' எழுதியிருக்கின்றது.

ஆனல் ராஜீவ் காந்தி அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது என்ன புதிதாக இதைப் பற்றிச் சிந்திப்பது? சிந்தியுங்கள்; வேண்டாமென்று சொல்லவில்லை. இந்தியா முழுமைக்கும் இது குறித்து ஒரு NEW LOOK-ஒரு புதிய பார்வை-ஒரு கண்

ணேட்டம் வேண்டுமென்று சொல்கிறீர்கள். தயவு செய்து இந்த விஷயத்திலாவது தமிழ்நாட்டைத் தனித்து விட்டு விட்டுச் சிந்தியுங்கள். இதையும் சேர்த்துச் சிந்திக்காதீர்கள். இப்படி சொல்வதால் தமிழ்நாடு தமிழருக்கே என்ற கோஷத்தின் அடிப்படையிலே சொல்லவில்லே.

எப்படி இந்திப் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வை மதித்து இன்னமும் நீங்கள் பயந்து பயந்து ஒளிந்து ஒளிந்து மறைந்து மறைந்து நடந்து கொள்கிறீர்களோ, அதைப் போலக்கூட அல்ல; பட்ட வர்த்தனமாகச் சொல்கிறேன்.

நீங்கள் அகில இந்தியாவில் ஒரு New Look இந்த இட ஒதுக்கீட்டு முறையிலே பின்பற்ற வேண்டுமென்று விரும்பினல், தமிழ்நாட்டை வம்புக்கு இழுக்காதீர்கள். இழுத்தால் ஆப்பசைத்த கதையாக ஆகிவிடும் என்பதை மாத்திரம் இளம் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு திராவிடர் இயக்கத்தினுடைய அறுபது ஆண்டு கால வரலாற்றின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

ராஜீவ் காந்தி அவர்களே, உங்களுடைய தாத்தா (பண்டித ஜவகர்லால் நேரு) என்ன சொன்னர்? 2-12-54ல் காங்கிரஸ் பார்லிமெண்ட் பார்ட்டி மீட்டிங் (பாராளு மன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டம்). அன்று பேசும் போது குறிப்பிட்டார்.

“I will lay special emphasis on casteism, because it is the most dangerous tendency. We talk about casteism and we condemn it as we should, but the fact remains that a half

dozen or may be ten so-called superior castes dominate the Indian scene among the Hindus' There is no doubts about it. If we do not equalise or tend to equalise, undoubtedly casteism will flourlish in a most dangerous way"

"ஒரு அரை டஜன் பத்து உயர்ந்த ஜாதிக்காரர்கள் இந்தியாவிலே இந்து மதத்தில் இன்றைக்கு ஆதிபத்தியம் செலுத்திக் கொண்டிருக்கின்ற சாதிக்காரர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்கள் தொடர்ந்து அவர்களுடைய சாதியை வலியுறுத்திக் கொண்டு இருப்பார்களேயானால் ஒரு சமத்துவம்—ஒரு சமநீதி - சாதிக்களுக்கிடையே தருவதற்கு அவர்கள் மறுப்பார்களேயானால் அது மிகவும் ஆபத்தான வழியாக ஆகிவிடும்'' என்று ஜவகர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள்.

அது மாத்திரமல்ல; 68ஆம் ஆண்டு சென்னையிலே இருந்து ஒருவர் இந்த இட ஒதுக்கீட்டை மறுத்து உச்ச நீதிமன்றத்திலே ஒரு தாவா செய்திருந்தபோது உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கிறது.

"A caste is also a class of citizens and if the caste as a whole is socially and educationally backward reservation can be made in favour of such caste within the meaning of article 15 (4)."

என்று சுப்ரீம்கோர்ட் தெளிவாக இந்த இட ஒதுக்கீட்டை ஆதரித்து அன்றைக்குக் கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

அதைவிட ராஜீவ் காந்தி அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என் கையிலே இருப்பது 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18ஆம் நாள் பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானம். ஏன் இந்தத் தீர்மானத்தைப் பாராளுமன்றம் நிறைவேற்ற வேண்டிய நிலைமைக்கு வந்தது என்ருல், 81ஆம் ஆண்டு இன்று சோதனைக்கு ஆளாக்கப்பட்டாரே சோலங்கி இவர் அன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு 5 சதவிகித இட ஒதுக்கீடு தந்தார். அவ்வளவுதான். இப்போது தந்தது 10 சதவிகிதத்தை 18 அதிக மாக்கி 25 ஆக ஆக்கினர். வெளியே அனுப்பி விட்டார்கள். அதுதான் சோலங்கி செய்த தவறு. கிட்டத் தட்ட நூற்றுக்கணக்கான பிணங்கள் அங்கே விழுந்து சோலங்கி அப்புறப்படுத்தப்பட்டு விட்டார்.

அவரேதான் 81ஆம் ஆண்டு பொறுப்பிலே இருந்த பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு 5 சதவிகிதம் என்று இட ஒதுக்கீடு செய்தார். அதையும் அங்குள்ள உயர் சாதிக்காரர்கள் ஆதிக்கக்காரர்கள் எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தினர்கள். ஐந்தாறு பிணங்கள் அப்போதும் விழுந் தன.

அதைத் தொடர்ந்து 81ஆம் ஆண்டு நாடாளு மன்றத்தில் இந்தத் தீர்மானம் வந்தது.

அந்தத் தீர்மானத்தினுடைய முகப்பு வாசகம் என்ன தெரியுமா?

“That this House expresses its concern and anguish over the situation prevailing

in Gujarat over the reservation issue. It reiterates its firm commitment to the national policy on' reservations as enshrined in the constitution.'!

"இட ஒதுக்கீடு குறித்த குஜராத் பிரச்சினையில் இந்தப் பாராளுமன்றம் தனது கவலையையும் வேதனையையும் தெரிவிப்பதோடு, அரசியல் சட்டத்திலே இட ஒதுக்கீடு குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ள தேசியக் கொள்கையில் இந்த அவை தனது உறுதியை மீண்டும் வலியுறுத்தி தெரிவிக்கிறது."

என்று நாடாளு மன்றத்திலே 81-ம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்குப் பிறகு ராஜீவ் காந்தி New Look என்கிறார். அப்படியானால் உங்களுடைய அம்மா இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் காலத்தில் நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்றத் தீர்மானத்தை நீங்கள் தூக்கி எறிய முனைகிறீர்களா?

அப்படிப்பட்ட துணிவோடு நீங்கள் அந்தச் செயலில் இறங்கப் போகிறீர்களா? இறங்குங்கள் வேறு மாநிலத்தோடு மோதுங்கள். ஆனால் தமிழ் நாடு பெரியாரும் அண்ணாவும் பக்குவப்படுத்திய மண். அதை மாத்திரம் மறந்துவிடாதீர்கள். இன்றைக்கு இதை தேசிய அளவிலே சிந்திப்பதற்குத் தயார் என்று நாங்கள் இடம் கொடுத்தால் நாளைக்கு- "மொழிப் பிரச்சினையையும் தேசிய அளவில் மீண்டும்

சந்திப்போம். இரு மொழித்திட்டம் அதெல்லாம் வேண்டாம். மீண்டும் அவைகளைப்பற்றி சிந்திப்போம்'' என்று அழைப்பீர்கள். அப்படியே நீங்கள் அழைக்க ஆரம்பித்தால் எங்கள் எதிர்காலம் என்ன ஆகும் என்று எங்களுக்குத் தெரியும்.

எனவேதான், தந்தை பெரியார் அவர்களுடைய படத்தைத் திறக்கிற நேரத்தில் நாளைய தினம் இட ஒதுக்கீடு மாநாட்டில் இது குறித்த தீர்மானங்கள் நிறை வேற்றப்பட இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத் தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் கழகத்தினுடைய கொள்கைகளை, தொடர்ந்து நாளைக்கும் ஒலிக்க இருக்கிறார். தளபதி வீரமணி அவர்களும் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர் களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல இருக்கிறார் கள்.

இதற்கெல்லாம் வழிவகுத்து எந்தச் சோதனைகள் வந்தாலும் இந்த இனத்தை, இனமானத்தைக் காப் பாற்ற நம்மைத் தயார்படுத்தித் தந்த தலைவனுடைய படத்தைத் திறக்கிற நேரத்தில் அந்த மாபெரும் மேதை மறைந்ததையொட்டி நடைபெற்ற ஒரு நினைவுநாள் கவியரங்கத்தில் நான் எழுதிப் பாடிய கவிதையை மாத் திரம் படித்துவிட்டு என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன்.

அந்த கவிதை:-

திருவரங்கப் பெருமாள் போல் படுத்திருந்த
தமிழ் உணர்வைத்
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச்செய்து

தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியார் அன்ருே?
தெருவரங்கம், கலையரங்கம், இசையரங்கம்,
திரையரங்கம் எல்லாமே
'அம்மாமி அத்திம்பேர்!'
ஜலதரங்கம்; அதுமாற்றித்
தமிழ் அரங்கம், தனி அரங்கம் கண்டவர்க்குக்
கவியரங்கம் பாடுவது பொருத்தமன்ருே?
அதனுல்தான்
"பயிர் போன்ருர் உழவருக்குப் பால் போன்ருர்
குழந்தைகட்குப் பசும்பால் கட்டித்
தயிர் போன்ருர் பசித்தவர்க்குத் தாய் போன்ருர்
ஏழையர்க்குத் தகுந்தவர்க்குத்
செயிர் தீர்ந்த தவம்போன்ருர் செந்தமிழ்
நாட்டில் பிறந்த மக்கட்கெல்லாம்
உயிர் போன்ருர்" என்று
பாரதிதாசப் பாவேந்தன் பாடிச்சென்ருன்-அவரை;
"வீடுகட்டி அதற்குள்ளே வைக்கோலைத்
திணிப்பதுவோ
வீடு கட்டாமலே வைக்கோற்போர் போடலாமே
எனச் சொன்ன ஈ. வெ.ரா. நாத்திகரா?
இல்லை, இல்லை;
அவர்,
இயற்கையின் புதல்வர்-இந்த மண்ணை மணந்த
மணுளர்-
எதிர்காலத் தமிழகத்துப் பெருமைக்குத் தூதர்"
என்று
அக்ரகாரத்து அதிசய மாமனிதர் வ.ரா. முன்பு

அழகாக வரைந்தார் ஒரு கட்டுரைதான்!
தங்கத்தின் உருக்கில் வந்த தனித்ததோர்
ஒளியைப்போல
செங்கதிர் உதயமாகும் செவ்வானம் வெட்கியோடப்
பொங்கியே எழுந்தார் பெரியார், புதுமைக்
காளேகள் கோடி
உறுதியாய்க் கூறி நின்ருர் குருதிதான் பணயமென்று
அங்கத்தில் பழுதென்ருல் அறுத்தெறிய
ஒப்புகிருேம், உயிர்பிழைக்கப்
பங்கமுறு சாதிமதப் பேதங்களால் அல்லலுறும்-மனித
சங்கத்தின் நோய்களேயத் திகைக்கின்ருேம்
சரிதாஞ? எனக் கேட்டார்.
அந்தச்
சிங்கத்தின் குரல் கேட்டுச் சிறுநரிகள் ஊளேயிட்டக்
கதைதானே நடந்ததிங்கே;
வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கைபோல் நிமிர்கின்ற பார்வை
உண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு—வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு-
அதில்
சாகும்வரை ஒளி உண்டு;
பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றிய பின்–இவரோ
படுகிழமாய்ப் போன பின்னும் பம்பரமாய்ச் சுற்றி
வந்தார்;
எரிமலேயாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்

எதிர்ப்புகளை நடுங்க வைக்கும் இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக் கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச்சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சு நகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைர நெஞ்ச வால்டேராய்
எம் தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்;
இன்றைக்கோ
இறப்பின் மடியினிலே வீழ்ந்திட்டார்.
மதுவிலக்குத் தேவை என்று மகாத்மா காந்தி
சொன்னவுடன்
மதுக்கலயம் கட்டாமல் இருப்பதற்குத் தோட்டத்தில்
மண்டி நின்ற தென்னைகளை வெட்டிச் சாய்த்தார்-
வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?
''வை, கத்தி; தீண்டாமைக் கழுத்தில்'' என்று
வரிப்புலியாய்க் களம் சென்று வாகை சூடி
வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம் வீரர்
காங்கிரசுக் கட்சிக்கு மீகாமனாய்க்
கதர் இயக்க வெற்றிக்குத் தளபதியாய்க்
காந்தி வழிநின்றிட்ட கர்மவீரன்
கட்சிக்குள் போராடக் காலம் வந்து
காஞ்சிபுரம் மாநாட்டில் வெளிநடந்தார்.
வ. வே .சு. அய்யர் என்பார் வடிகட்டிய
தேசபக்தர்
வகுப்புவாத உணர்வாலே வம்புக்கு அழைப்புத்
தந்தார்.
சேரன்மாதேவி ஊரில் சிறந்ததொரு குருகுலத்தில்

ஒரு குலத்துக்கொரு நீதி கடைபிடித்தால்
சகிக்குமா பெரியார் மனம்? சமருக்கு வில் வளைத்தார்-
சரித்திரம் படைக்கலுற்ருர்: அதன் விளைவாய்த்
தன்மான இயக்கத்தின் தந்தையாகத்
தமிழர் இனப் பாதுகாப்புத் தலைவராகப்
பெரியார் ஆனுர்—புது
நெறியார் ஆனுர்;
பிற்பட்டோர் நலனுக்கென்று நீதிக்கட்சி
பெரும்பணிகள் இயற்றிடவே முனைந்தபோதும்—அது
பித்தாபுரம் பனகல் என்று பிரபுக்கள் காலடியில்
வற்ருத செல்வந்தர் கைத்தடியில் இருந்ததாலே
அதைமாற்றி
மாளிகையில் இருந்த கட்சி மக்களிடை வருவதற்கு
மாமேதை அண்ணுவின் துணையுடனே வெற்றி கண்டார்
மந்தி கை மாலையென
இந்தி கைத் தமிழர், ஆக
வஞ்சகச் சூழ்ச்சிகள் வலையாக விரிந்தபோது
அஞ்சிடா நெஞ்சு கொண்டு அறுத்தவர் பெரியார்தானே.
அவர்,
பாதம் படாத பட்டி தொட்டி உண்டோ—அவர்
பேர் கேட்டுக்
காதம் ஓடுகின்ற ஆத்திகரும் (அவர்) பேசக்
கேட்டால், தமிழ்க்
கீதம் கேட்ட கிறுகிறுப்பில் மயங்கிப் போவார்.
அறிவு மழை பொழியும் எழில்
வழியும்—இருள் கழியும்
தெளிவுமிகு உரைகள் பல

ஒளிரும் திறன் மிளிரும்-
கடலின்மடை அலையின் ஒலி- மலையின் முடி-
தழுவும் முகில் வழியும்;
அறிவு மழை பொழியும்;
ஆணவங்கள் அழியும்;
அடிமை முறை ஒழியும்.
அய்யாவின் பேச்சென்ருல்
அதிரசம் தின்பதுபோல் கழகத்தவர்க்கு
அணுகுண்டு வெடித்தது போல் கயவர்கட்கு!
அவர் தலைமை ஏற்று நானும் அவருடனே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில்
ஆரூரில் மாணவனுய் இருந்தபோதே இணைந்து
விட்டேன்
அதன் பிறகு புதுவையில் நான் தாக்குண்டபோது
அய்யாவின் கையாலே மருந்திட்டார்,
என் காயத்திற்கு.
குடியரசு அலுவலகக் குருகுலத்தில்
கொள்கை வழிப்பாடங்கள் பயின்ற காலை—நான்
தமிழரசுத் தலைவனுக வருவேன் என்றும்,
எனை வளர்த்த
தந்தைக்கு அரசு மரியாதையுடன்
இறுதி வணக்கம் செய்வேன் என்றும்
எண்ணியும் பார்த்ததில்லை;
"பாராட்டிப் போற்றி வந்த பழைமை லோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்;
ஈவெரா என்ற வார்த்தை இந் நாட்டு வஞ்சகத்தின்
அடிபீடம் ஆட்டுகின்ற சூருவளியாம்- அவர்

வெண்தாடி அசைந்தால் போதும்,
கண்சாடை தெரிந்தால் போதும்-
கறுப்புடை தரித்தோர் உண்டு-கொடுமையை
நறுக்கியே திரும்பும் வாட்கள்"
ஈரோட்டுக் குருகுலத்தில் நான் இயற்றியது
இப்பாடல்

இன்றைக்கும் நினைக்கின்றேன்- பெரியார்
இளவயதில் மறையவில்லை
நிறைவயது வாழ்ந்துவிட்டே ஓய்வுகொண்டார்
எனினும்

தாஜ்மகால் திடுமெனத் தரைக்குள்ளே போய் விட்டால்
அதைக்கட்டி, ஆண்டு பல ஆயிற்றே என்று
ஆறுதல்தான் பெறுவோமா?

தஞ்சைக் கோபுரம் சாய்ந்துவிட்டால் அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்குதல்தாம் எளிதாமோ? இவரோ,
தஞ்சைக் கோபுரம் போல் உயர்ந்தவர்-
தாஜ்மகால் போல் சரிதம் படைத்தவர்-
அவர் வாழ்வார் வாழ்வார் என்று வாழ்த்துகின்றேன்.

ஆய்வக நூல்நிலையம் சென்னை-18.

★



வண்ண அச்சு :

தமிழோசை அச்சகம்,
84, அபிபுல்லா சாலை,
தியாகராய நகர்,
சென்னை—17.